

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (11.9.2025), சென்னையில் உடல்நலக்குறைவால் இயற்கை எய்திய தனது சம்பந்தியும், சபரீசன் அவர்களின் தந்தையுமான வேதமூர்த்தி அவர்களின் உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். உடன் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., துணைப் பொதுச் செயலளார் ஆ.இராசா எம்.பி., அமைச்சர்கள் எஸ்.இரகுபதி, ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், அர.சக்கரபாணி, மா.சுப்பிர மணியன், பி.கே. சேகர்பாபு, முனைவர் பழனிவேல் தியாகராஜன், சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, மருத்துவர் நா. எழிலன், அரவிந்த் ரமேஷ் உள்ளிட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், வீட்டுவசதி வாரியத் தலைவர் பூச்சி எஸ். முருகன் ஆகியோர் உள்ளனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் .உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (11.9.2025) சென்னையில் உடல் நலக்குறைவால் இயற்கை எய்திய தனது மைத்துனர் வே.சபரீசன் அவர்களின் தந்தையார் வேதமூர்த்தி அவர்களின் திருவுடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்.

# முதலமைச்சரின் மருமகன் சபரீசன் தந்தை வேதமூர்த்தி மறைவு!

## பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன் இரங்கல்!

சென்னை, செப். 12 --

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவர் பேராசிரியர் கே.எம்.காதர் மொகிதீன் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் கூறியிருப்பதாவது: தாயின் சிறந்த கோவில் இல்லை தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை என்று நமது முன்னோர்கள் மொழிந்து இருக்கிறார்கள். முதலமைச்சரின் மருமகன் சபரீசனின் தந்தை வேதமூர்த்தி அவர்கள் மறைவுற்ற செய்தியறிந்து மிகுந்த அதிர்ச்சியும், வேதனையும் அடைந்தேன். வேதமூர்த்தி மறைவு அவரது ஒட்டுமொத்தக் குடும்பத்திற்குமே ஈடு செய்ய முடியாத பேரிழப் பாகும். அவர் ஆன்மா சாந்தி அடைய இறைவனிடத்தில் பிரார்த்திக்கிறேன். தந்தையை இழந்து வாடும் சபரீசன் அவர்களுக்கும், குடும்பத்தில் உள்ள அனைவருக்கும் தனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதாகவும், அவரின் இழப்பால் வாடும் சபரீசன் அவர்களுக்கும், அவரது குடும்பத்தினருக்கும் பொறுமையையும் சகிப்பு தன்மையையும் இறைவன் வழங்க வேண்டு கொள்கிறேன் என்றும் பேராசிரியர் கே.எம்.காதர் மொகிதீன் தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

# முதல்வரின் மருமகன் சபரீசன் தந்தை எஸ்.வேதமூர்த்தி மறைவு!

## ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ இரங்கல்!

சென்னை, செப்.12 -

முதல்வர் அவர்களின் மருமகன் சபரீசன் அவர்களின் தந்தை வேதமூர்த்தி மறைவுக்கு இரங்கல் தெரிவித்து ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழக முதலமைச்சர் அவர்களின் மருமகன் சபரீசன் அவர்களின் தந்தையார் வேதமூர்த்தி அவர்கள் மறைந்தார் என்பதை அறிந்து துயரம் அடைந்தேன், சபரீசன் அவர்களுக்கும். அவரது குடும்பத்தார், உற்றார் உறவினர் அனைவருக்கும் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அச்செய்தியில் வைகோ . குறிப்பிட்டுள்ளார்.

## பேரறிஞர் அண்ணா 117 வது பிறந்த நாள் செப்.15 அன்று

# காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் 1170 வாக்குச்சாவடிகளில் உறுதி மொழி ஏற்பு!

## மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிக்கை

காஞ்சிபுரம், செப்.12

கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டத்தில் அறிவித்தபடி காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் அமைந்துள்ள 1170 வாக்குச் சாவடிகளிலும், பேரறிஞர் அண்ணா அவர்களின் 117 வது பிறந்த நாளான செப்டம்பர் 15 திங்கட்கிழமை அன்று வாக்குச்சாவடி வாரியாக பி.எல்.ஏ.2, பி.டி.ஏ., பி.எல்.சி. ஆகியோர் பங்கேற்கும் வாக்குச்சாவடி கூட்டங்களை நடத்தி, ஓரணியில் தமிழ்நாடு திட்டத்தின் படி கழகத்தில் உறுப்பினர்களாக இணைந்த குடும்பங்களை அழைத்து அவர்களையும் பங்கு பெறச் செய்து அக் கூட்டங்களில் அனைவரும் இணைந்து உறுதி மொழி ஏற்றிட வேண்டும் என்று மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கையில் வேண்டுகோள் விடுத்து ள்ளார்.

இது குறித்து மாவட்டக் கழகச்செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:



கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் காணொலி மூலமாக மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம் நடைபெற்றது. இக் கூட்டத்தில் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முத்தாய்ப்பான அறிவிப்பினை அறிவித்தார். முதல்வர் அவர்களின் அறிவிப்பின் படி செப்டம்பர் 15 திங்கட்கிழமை அன்று பேரறிஞர் அண்ணா அவர்களின் 117 வது பிறந்த நாளன்று தமிழ்நாடு முழுவதுமுள்ள 68 ஆயிரம் வாக்குச்சாவடிகளிலும் ஓரணியில் தமிழ்நாடு இயக்கத்தில் இணைந்த குடும்பங்கள் ஒன்று கூடி மண், மொழி, மானம் காப்பதற்கான உறுதி மொழியை முன் மொழிய வேண்டும்.

ஒவ்வொரு வாக்குச்சவாடியிலும் பள்ளி மைதானங்கள், சமுதாயக் கூடங்கள், திருமண மண்டபங்களில் ஓரணியில் தமிழ்நாடு முன்னெடுப்பில் இணைந்த குடும்பங்களை அழைத்து நிகழ்ச்சி நடத்திட வேண்டும்.

என் வாக்குச்சாவடி, வலிமையான வாக்குச்சாவடி, என்பதை உணத்திடும் வகையில் அந்தந்த வாக்குச் சாவடிக்குட்பட்ட மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணியினர் கட்டாயம் வாக்குச்சாவடி கூட்டங்களை நடத்திடுவது மட்டுமின்றி உறுதி மொழியையும் ஏற்றிட வேண்டும்.

குறிப்பாக பி.டி.ஏ., பி.எல்.சி, ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர்கள் என குறைந்த பட்சம் 100 பேர்களாவது ஒவ்வொரு கூட்டங்களிலும் கலந்து கொள்ளும் வகையில் கழக நிர்வாகிகள் வழி காண வேண்டும்.

காலை 9 மணிக்கு பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளையொட்டி அவரது திருவுருவப் படத்திற்கு திருவுருவச் சிலைகளுக்கு மாலை அணிவித்து இனிப்பு வழங்கி கொண்டாடுவது மட்டுமின்றி, அவ்விடத்திலே அனைவரும் உறுதி மொழி ஏற்றிடும் வகையில் நிகழ்ச்சிகளை அமைத்திட வேண்டும்.

நமது காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் 1170 வாக்குச் சாவடிகளில் உறுதி மொழி ஏற்பு நிகழ்ச்சி யை அனைவரும் ஒன்றிணைந்து நடத்திட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

நாம் உறுதி மொழி ஏற்றிடும் வாசகம்,

நான், தமிழ்நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் விகிதாசாரத்தைக் குறைக்கும் நியாயமற்ற தொகுதி மறுவரையறைக்கு எதிராகப் போராடுவேன். தமிழ்நாட்டைத் தலைகுனிய விட மாட்டேன் என உறுதி ஏற்கிறேன்.

நான், வாக்காளர் பட்டியல் மோசடி மூலம் தமிழ்நாட்டு மக்களின் வாக்குரிமையைப் பறிக்கும் ஜுஐசுக்கு எதிராக நிற்பேன். தமிழ்நாட்டைத் தலைகுனிய விடமாடேன் என உறுதி ஏற்கிறேன்.

நான், நீட் மற்றும் இளைஞர்களை முடக்கும் எந்தவொரு திட்டத்தையும் எதிர்த்து நிற்பேன், நம் மாணவர்களுக்கு உரிய கல்வி நிதிக்காகப் போராடுவேன். ஒரு போதும் தமிழ்நாட்டை தலைகுனிய விட மாட்டேன் என உறுதி ஏற்கிறேன்.

நான், தமிழ் மொழி, பண்பாடு மற்றும் பெருமைக்கு எதிரான எந்தவொரு பாகுபாட்டையும் எதிர்த்துப் போராடுவேன். எதற்காகவும் தமிழ்நாட்டைத் தலைகுனியவிட மாட்டேன் என உறுதி ஏற்கிறேன்.

நான், பெண்கள்விவசாயிகள்மீனவர்கள்நெசவாளர்கள் என ஒவ்வொரு உழைக்கும் வர்க்கத்தின் நலன்களையும் பாதுகாக்கத் தேவையான நிதிக்காகப் போராடுவேன். தமிழ்நாட்டைத் தலைகுனிய விடமாட்டேன் என உறுதி ஏற்கிறேன்.

என்று நாம் ஒவ்வொருவரும் தமிழ்நாட்டினை மேம்படுத்திட, தமிழ்நாட்டை பாதுகாத்திட, தமிழ் மக்களின் உரிமையை பாதுகாத்திட நமது கழகத் தலைவர் முதல்வர் அவர்களின் வழியில் இவ் உறுதி மொழியை ஏற்று; வரும் 2026 சட்டமன்றத் தேர்தலில் மீண்டும் கழகத் தலைவர் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் தலைமையில் திராவிட மாடல் அரசு அமைய பேரறிஞர் அண்ணா அவர்களின் 117 வது பிறந்த நாளில் நாம் அனைவரும் ஒன்றிணைந்து உறுதி மொழி ஏற்பதோடு இதனையே நாம் அனைவரும் சபதமாக ஏற்க வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் செப்டம்பர் 15 அன்று ஆங்காங்கே மாவட்ட, மாநகர, பகுதி, நகர, ஒன்றிய,பேரூர் கழகத்திற்குட்பட்ட வாக்குச் சாவடி முகவர்கள் மற்றும் ஓரணியில் தமிழ்நாடு திட்டத்தின் மூலம் கழத்தில் இணைந்த குடும்பத்தினைரையும் அழைத்து; நமது காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் அடங்கிய 1170 வாக்குச்சாவடிகளிலும், கழக நிர்வாகிகள், 100 பேர்களை அழைத்து உறுதி மொழி எடுத்துக்கொள்வதோடு, அவர்களுக்கு சிற்றுண்டி குடிநீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகளையும் செய்து கொடுத்திட வேண்டுமாய் கழக நிர்வாகிகளை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிக்கையில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# சென்னை வடகிழக்கு மாவட்டம் பகுதி, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள் அவசர ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்,சுதர்சனம் எம்,எல்,ஏ, அறிவிப்பு



சென்னை வடகிழக்கு மாவட்டம் பகுதி, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள் அவசர ஆலோசனைக் கூட்டம், மாவட்டக் கழக அவைத் தலைவர் குறிஞ்சி எஸ்.கணேசன் தலைமையில், சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. எனது முன்னிலையில் இன்று (12.09.2025 வெள்ளிக்கிழமை) மாலை 4.00 மணியளவில் மாதவரம் வி.ஆர். டி. நகரில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெறுகிறது.


மேற்படி கூட்டத்தில் மாவட்டத்தில் அடங்கிய மாநில நிர்வாகிகள், முன்னாள், இன்னாள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாதவரம் தொகுதி பார்வையாளர் மற்றும் திருவொற்றியூர் தொகுதி பார்வையாளர், மாவட்ட நிர்வாகிகள், பகுதி கழக, ஒன்றிய கழக, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள் மாவட்ட அணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**பொருள்:** செப்டம்பர் 15.09.2025 பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் ஓரணியில் தமிழ்நாடு / வாக்குச்சாவடி அளவிலான உறுதிமொழி முன்மொழிவுக் கூட்டங்கள் கழக ஆக்கப் பணிகள்

மாதவரம் **எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ.**
செயலாளர் - சென்னை வடகிழக்கு மாவட்டம்

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பெ.சு. திருவேங்கடம்
### செப்டம்பர் 12 (2022)



1954ஆம் ஆண்டு கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்ற தொடங்கி கிளாம்பாடி கிளைச் செயலாளராகி, அதனைத் தொடர்ந்து ஒன்றியச் செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், சட்டதிட்டக்குழு உறுப்பினர், தேர்தல் பணிக்குழுச் செயலாளர், சொத்துப் பாதுகாப்புக்குழுச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகள் வகித்து கழகப் பணியாற்றியவர்.

பல்வேறு கூட்டுறவு சங்கங்களில் செயலாளர், தலைவர் மற்றும் ஊராட்சி மன்ற தலைவர், ஒன்றியக்குழு துணைத் தலைவர், ஒன்றியக்குழு தலைவர், நான்கு முறை கலசப்பாக்கம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் என பல பொறுப்புகள் வகித்து, மக்கள் பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

2017ஆம் ஆண்டு திண்டுக்கல்லில் நடைபெற்ற முப்பெரும் விழாவில் கழகத் தலைவர் அவர்கள் திருக்கரங்களால் "அண்ணா விருது" பெற்றவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு பல முறை சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### புதுக்கோட்டை க. வீரைய்யா
### செப்டம்பர் 12 (1993)



புதுக்கோட்டை மாவட்டத்தின் கழகத் தூண்களில் ஒருவர்.

நாடாளுமன்ற உறுப்பினராகப் பணியாற்றியவர்.

தி.மு.கழகத்தின் சொத்து பாதுகாப்பு உறுப்பினராகவும், தலைமை நிர்வாகக்குழு உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.